## வாக்குறுதி அளித்தபடி முதல் நாளிலேயே ஜெயலலிதா 5 முக்கிய உத்தரவுகள்

# வாக்களித்த மக்களுக்கு வீதி வீதியாக சென்று பா.வளர்மதி நன்றி

சென்னை, மே 29– முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் வீதி வீதியாக சென்று வாக்களித்த மக்களுக்கு முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி நன்றி தெரிவித்தார்.

முதலமைச்சர் அம்மா வாக்குறுதி அளித்தபடி பதவி ஏற்ற முதல் நாளிலேயே 5 முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டிருக்கிறார் என்றும் அவர் பெருமிதத்துடன் கூறினார்.

சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் பா.வளர்மதி 2–வது முறையாக போட்டியிட்டு வெற்றிவாய்ப்பை இழந்தார்.

தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களும், வெற்றி வாய்ப்பை இழந்தவர்களும் மக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அம்மா உத்தரவிட்டிருந்தார். அதன்படி தமிழகம் முழுவதும் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஆயிரம்விளக்கு தொகுதியில் போட்டியிட்ட பா.வளர்மதி நேற்று ஆயிரம்விளக்கு தொகுதியில் பல்வேறு பகுதிகளுக்கு சென்று நன்றி தெரிவித்தார்.

இன்று 2–வது நாளாக நன்றி தெரிவித்தார்.

பல்வேறு இடங்களில் அவர் நன்றி தெரிவித்து பேசினார். அப்போது அவர் பேசியதாவது:–

முதலமைச்சர் அம்மாவை 6–வது முறையாக முதலமைச்சராக்கி இருக்கிறீர்கள். முதலமைச்சர் அம்மா உங்கள் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறார். நீங்கள் அவர் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள்.

மீண்டும் அம்மாவை முதலமைச்சராக்கியதற்காக உங்கள் பாதம் தொட்டு நன்றி தெரிவித்து கொள்கிறேன். முதலமைச்சர் அம்மா

தேர்தலின்போது வாக்குறுதிகளை தந்தார். கடந்த தேர்தலின்போது சொன்ன வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி தந்தார். சொல்லாத திட்டங்களையும் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

இந்த தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளில், பதவி ஏற்ற முதல் நாளிலேயே 5 முக்கிய வாக்குறுதிகளை அம்மா நிறைவேற்றி தந்திருக்கிறார்.

தாலிக்கு 8 கிராம் தங்கம், 100 யூனிட் கட்டணமில்லா மின்சாரம், 500 மதுக்கடைகள் மூடல், மதுக்கடைகளின் நேரம் 2 மணி நேரம் குறைப்பு, ரூ.5,780 கோடி விவசாய கடன் தள்ளுபடி, கைத்தறி நெசவாளர்களுக்கு கட்டணமின்றி 200 யூனிட் மின்சாரம், விசைத்தறி நெசவாளர்களுக்கு கட்டணமின்றி 750 யூனிட் மின்சாரம் என 5 முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டு வாக்குறுதிகளை நிறைவேற்றி தந்திருக்கிறார். இது யாரும் செய்யாத சாதனை.

முதலமைச்சர் அம்மா சொன்னதை செய்வார். சொல்லாததையும் செய்வார். அம்மா ஆட்சியில் தாய்மார்களுக்கு ஏராளமான பலன் உண்டு. அம்மா ஆட்சியில்தான் பெண்கள் தலைநிமிர்ந்து நடக்க முடிகிறது. பெண்களின் கஷ்டங்களை உணர்ந்தவர் அம்மா. எனவேதான் பெண்கள் நலனுக்காக ஏராளமான திட்டங்களை அம்மா கொண்டு வந்திருக்கிறார்.

அம்மா அனைத்து தொகுதிகளையும் சரி சமமாக பார்ப்பவர். இந்த தொகுதியிலும் உங்களது கோரிக்கைகளை அம்மா நிறைவேற்றி தருவார். நீங்கள் என்றும் அம்மாவுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இரட்டை இலை சின்னத்துக்கு வாக்களித்த உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை பாதம் தொட்டு வணங்கி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாற பா.வளர்மதி பேசினார்.

இன்று 111 மற்றும் 118வது வார்டுகளில் உள்ள சுதந்திரா நகர், திடீர் நகர், மக்கீர் கார்டன், மாடர்ன் பள்ளி சாலை, அஜீஸ் முல்க் தெரு, சீனிவாச பெருமாள் சன்னதி, அம்மையப்ப முதலி தெரு, பி.வி.கோவில் தெரு, புதுப்பேட்டை, தேனாம்பேட்டை, பாபு தெரு, வி.வி.கோவில் தெரு, முத்தையா தெரு, நாட்டுமுத்துநாயக்கன் தெரு, இளங்கோ சாலை, வரதராஜபுரம், நல்லான் தெரு, போயஸ் கார்டன் பகுதிகளில் வளர்மதி சென்று மக்களுக்கு கைகூப்பி வணங்கி நன்றி தெரிவித்தார்.

உடன் ஆயிரம்விளக்கு பகுதி செயலாளர் நுங்கை மாறன் எம்.சி., புஷ்பாநகர் ஆறுமுகம் எம்.சி., யு.கற்பகம் எம்.சி., நுங்கை மூர்த்தி, ஜார்ஜ், சாலை உமாபதி, பந்தல்பாபு, ஜிம்கிலி என்ற பச்சையப்பன், கிரீம்ஸ் ரோடு சந்துரு, ரமேஷ், இ.பன்னீர்செல்வம், பிரஸ் தனசேகர், சாரதா தியாகராஜன், ஜோஸ்பின் முருகவேல், காஞ்சனா ஜார்ஜ் உட்பட ஏராளமானபேர் சென்றார்கள்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆணைக்கிணங்க விழுப்புரம் நகராட்சி பகுதிகளில் அமைச்சர் சி.வி. சண்முகம் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் நகர்மன்ற தலைவர் பாஸ்கரன், கோலியனூர் முன்னாள் ஒன்றிய செயலாளர் சுரேஷ் பாபு ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆணைக்கிணங்க அமைச்சர் எம்.சி. சம்பத் கடலூர் சீமாட்டி சிக்னலில் துவங்கி லாரன்ஸ்சாலை, சுப்புராயலு நகர் உள்ளிட்ட பகுதிகளுக்கு வீதிவீதியாக சென்று வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் மாவட்ட அவை தலைவர் கோ.ஐயப்பன், நகரமன்ற தலைவர் குமரன், துணை தலைவர் சேவல் குமார், ஒன்றிய செயலாளர் பழனிசாமி, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ரவீந்திரன், மாவட்ட விவசாயபிரிவு செயலாளர் காசிநாதன், புதுப்பாளையம் கூட்டுறவு வங்கி தலைவர் டி.ஜி.என். ராமலிங்கம், மாவட்ட ஜெயலலிதா பேரவை பொருளாளர் ஆர்.வி. ஆறுமுகம், துணை செயலாளர் ஏ.ஜி. ராஜேந்திரன் உள்ளிட்ட உடன் சென்றனர்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆணைக்கிணங்க உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருநாவலூர், பரிக்கல், பெரியப்பட்டு, கருவேப்பிளைபாளையம், மடப்பட்டு, வண்டிப்பாளையம் உள்ளிட்ட கிராமங்களுக்கு சென்று இரா.குமரகுரு எம்.எல்.ஏ. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். ஒன்றிய செயலாளர்கள் ஏ.ஆர்.சண்பகவேல், வக்கீல் ஜி.மணிராஜ், முன்னாள் ஒன்றிய செயலாளர் ஏகாம்பரம், மாவட்ட துணை செயலாளர் பரமாத்மா, திருநாவலூர் கூட்டுறவு சங்க தலைவர் கே.ஜி.பி. ராஜாமணி உள்ளபட பலர் உடன் இருந்தனர்.

## 5–ம் வகுப்பு வரை தேர்வே நடத்தக் கூடாது மத்திய அரசுக்கு பரிந்துரை

புதுடெல்லி,மே.29– பள்ளிகளில் 5–ம் வகுப்பில் இருந்து தான் மாணவர்களுக்கு தேர்வு நடத்த வேண்டும் என புதிய கல்விக் கொள்கை தொடர்பாக ஆய்வு நடத்திய டி.எஸ்.ஆர். சுப்பிரமணியன் தலைமையிலான குழு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

புதிய கல்விக் கொள்கைகளை வகுக்க பரிந்துரைகள் செய்யும் வகையில் முன்னாள் கேபினட் செயலாளர் டி.எஸ்.ஆர். சுப்பிரமணியன் தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்தது. டெல்லி அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் சைலஜா சந்திரா, டெல்லி அரசின் முன்னாள் உள்துறை செயலாளர் சேவாராம் சர்மா, குஜராத் அரசின் முன்னாள் தலைமை செயலாளர் சுதிர் மன்கத் மற்றும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் முன்னாள் இயக்குனர் ஜே.எஸ். ராஜ்புத் ஆகியோர் அந்த குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

அந்த குழு பல கல்வி நிறுவனங்களுக்கு நேரில் சென்று, கல்வியாளர்களை சந்தித்து பேசி, தங்களுக்கு வந்த பரிந்துரைகள், கோரிக்கைகளை ஆய்வு செய்து மத்திய அரசிடம் தனது அறிக்கையை சமர்பித்துள்ளது.

அந்த அறிக்கையில் உள்ள சில பரிந்துரைகள் குறித்து தகவல் கிடைத்துள்ளன. அதன் விபரம் வருமாறு:–

8ம் வகுப்பு வரை மாணவர்களை பெயிலாக்கக் கூடாது என்று கூறும் கல்வி உரிமைச்சட்டத்தை சீரமைத்து 4ம் வகுப்பு வரை மாணவர்களை பெயிலாக்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வர வேண்டும்.

பள்ளி மாணவர்களுக்கு 5–ம் வகுப்பில் இருந்து தான் தேர்வு நடத்த வேண்டும். தேர்வில் தோல்வி அடையும் மாணவ, மாணவியருக்கு மேலும் 2 வாய்ப்புகள் வழங்க வேண்டும். மாணவர்களின் திறனை மேம்படுத்துதல் மற்றும் தொழிற்கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்.

உயர் கல்வி தரத்தில் பல இந்திய நிறுவனங்களால் முன்னணி இடத்தை பிடிக்க முடியவில்லை. அதனால் கட்டுப்பாடுகளுடன் வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனங்கள் இந்தியாவுக்கு வர அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பொது அறிவிப்பு

சென்னை – 600 041, வெட்டுவாங்கேணி, நெ.71, முதல் அவென்யூ, முதல் குறுக்கு தெரு, கிழக்கு கடற்கரை சாலையில் வசிக்கும் திரு.உஸ்மான் பயாஸ் அவர்களின் மகள் செல்வி. அம்ரீன் ரிஸ்வானா அவர்களின் பொது அதிகாரம் பெற்ற திரு.உஸ்மான் பாஷா அவர்களின் மகன் திரு.உஸ்மான் பயாஸ் ஆகிய எனது கட்சிக்காரர் தெரிவிக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால்:

எனது கட்சிக்காரர் சென்னை – 600 005, திருவல்லிக்கேணி, அருணாச்சல ஆச்சாரி தெரு, பழைய நெ.58, நெ.6–ல் டவுன் சர்வே நெ.3045/5, 3045/4 மற்றும் 3045/7 உட்பட்ட 2053 மற்றும் 2080 சதுரடி பரப்பளவு கொண்ட நெ.ஏ, மற்றும் சி பிளாட்டுகளை திருவல்லிக்கேணி சார்பதிவகத்தில் கடந்த 17.06.2002 மற்றும் 26.06.2002 மற்றும் 06.02.2002 தேதிகளில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணங்கள் நெ.780/2002, 833/2002 மற்றும் 149/2002 மூலமாக கிரையம் பெற்றுள்ளார். மேற்கூறிய கிரையப் பத்திரங்களுடன் மைலாப்பூர்–திருவல்லிக்கேணி வட்டாட்சியரால் கொடுக்கப்பட்ட செல்வி.அம்ரீன் ரிஸ்வானாவின் பெயரிலுள்ள நில அளவை பதிவேடுகள் (டவுன் சர்வே நெ.3045/5, 3045/4 மற்றும் 3045/6, 3045/7) ஆகிய மேற்கண்ட அனைத்து தஸ்தாவேஜுகளும் எனது கட்சிக்காரர் தெலைத்துவிட்டார். மேற்படி ஆவணங்களை எனது கட்சிக்காரால் எங்கு தேடியும் கண்டுபிடிக்க இயலவில்லை. மேற்கண்ட ஆவணங்களை யாராவது வைத்திருந்தாலோ அல்லது அது பற்றி தெரிந்தாலோ தகுந்த ஆதாரங்களுடன் இந்த பொது அறிவிப்பு வெளியிட்ட 10 நாட்களுக்குள் கீழ்கண்ட முகவரியில் தெரியப்படுத்தவும்.

**L.MAGESH** MBA., B.L.,
Advocate.
Off:39, Kuppaiah Chetty Street, West Mambalam,
Chennai–600 033.
Cell: 98944 80030, 78108 80330

## EQUITAS HOLDINGS LIMITED

CIN: U65100TN2007PLC064069
Regd. Office: 410A, 4th Floor, Spencer Plaza, Phase II, No.769, Mount Road, Anna Salai, Chennai-600002
Tel: 044-4299 5000 | Fax: 044-4299 5050
www.equitas.in | Email: secretarial@equitas.in

### எக்விடாஸ் உறுப்பினர்களுக்கான அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 110 மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 (திருத்தப்பட்டது) ஆகியவற்றின்படி நிறுவனமானது, அதனுடைய பதிவு மற்றும் மாற்றத்தின் முகவர் கார்வி கம்ப்யூட்டர்ஷேர் பிரைவேட் லிமிடெட் (கார்வி) மூலமாக தங்கள் மெயில் ஐடியை டெப்பாசிட்டரிகளுடன் கார்வி உடன் அல்லது நிறுவனத்துடன் பதிவு செய்து கொண்டுள்ள உறுப்பினர்களுக்கு மே 26, 2016 அன்று இ–மெயில் கடிதத்தை யூசர் ஐடிகள் மற்றும் பாஸ்வேர்டுடன் கூடியதாக அனுப்பி வைத்துள்ளது என்றும் நிறுவனமானது தபால் வாக்கு அறிவிப்புகளை சுய விலாசமிட்ட தபால் தலைக் கட்டணம் முன் கூட்டியே செலுத்தப்பட்ட பிஸினெஸ் பதில் உறையுடனும் தபால் வாக்கு படிவத்துடனும் தங்கள் இ–மெயில் ஐடியை பதிவு செய்து கொள்ளாத உறுப்பினர்களுக்கு அனுப்பும் பணியை மே 28, 2016 அன்று முடித்து விட்டது என்றும் இதன் மூலம் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

நிறுவனமானது, சங்க உடன்படிக்கை என்கிற மெமோரண்டம் ஆப் அசோசியேஷனின் குறிக்கோள் கூறு திருத்தியமைப்பதற்கான அங்கீகாரம் தொடர்பான சிறப்புத் தீர்மானம் வாயிலாக உறுப்பினர்களின் சம்மதத்தை மின்–வாக்கு நடைமுறை உள்ளிட்ட தபால் வாக்கு மூலமாக கோருகிறது. தபால் வாக்கு அறிவிப்பு www.equitas.in இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

மே 20, 2016 தேதியன்று வரை (கட்–ஆப் தேதி) உறுப்பினர்களாக உள்ள அனைத்து நபர்களும் தங்கள் வாக்குகளை செலுத்தலாம். கட்–ஆப் தேதி வரை உறுப்பினர்களாக இல்லாதவர்கள் இந்த அறிவிப்பை தகவல் தெரிந்துகொள்ள மட்டும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நிறுவனமானது அங்கீகரிக்கப்பட்ட ஏஜென்சி கார்வியின் சேவைகளை மின்–வாக்கு செலுத்துவதற்காக அமர்த்திக் கொண்டுள்ளது. மேலும், தொழில் மேற்கொள்ளும் நிறுவன செயலர் Ms. R. புவனா அவர்கள் தபால் வாக்கு மற்றும் மின்–வாக்கு நடைமுறையை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நடத்துவதை கண்காணிக்கும் நெறியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தகுதி வாய்ந்த உறுப்பினர்கள், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்கு செலுத்தும் நேரத்தில் (அதாவது வாக்கு செலுத்தப்படுதல் – திங்கட்கிழமை மே 30, 2016 அன்று காலை 9.00 மணிக்கு துவங்கும்; செவ்வாய்கிழமை ஜூன் 28, 2016 அன்று மாலை 5.30 மணிக்கு முடியும் – இரு நாட்களும் சேர்த்து) தபால் வாக்கு அல்லது மின்–வாக்கு வசதியை பயன்படுத்தி வாக்கு அளிக்கலாம். கார்வி நிறுவனம், வாக்கு அளிக்கும் நேரம் முடிந்த பின்னர், மின்–வாக்கு வசதியை நிறுத்திவிடும். அந்த நேரத்திற்குப் பிறகு அனுமதிக்கப்படமாட்டாது. தீர்மானத்தின் மீது உறுப்பினர் வாக்களித்த பின்னர் உடனே அதை மாற்ற அனுமதிக்கப்படமாட்டாது. மேற்காணும் வாக்களிக்கும் நேரம் முடிந்த பின்னர் உறுப்பினர்களின் ஏதேனும் படிவம் வந்தால் அப்படிப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை என்பதாகவே கருதப்படும்.

தபால் வாக்குப் பதிவு அறிவிப்பு / படிவங்கள் கிடைக்கப் பெறாமல் அதனைப் பெற விரும்புகிற உறுப்பினர்கள் டூப்ளிகேட் படிவம் பெறுவதற்கோ தங்கள் குறைகளை தெரிவிக்கவோ தங்கள் ஃபோலியோ எண் / DP ID மற்றும் கிளையண்ட் ஐடி குறிப்பிட்டு பின்வரும் இ–மெயில் முகவரிக்கு secretarial@equitas.in எழுதவும். www.equitas.in என்கிற நிறுவனத்தின் இணையதளத்திலிருந்தும் தபால் வாக்குப் படிவத்தை தகவலிறக்கம் செய்து கொள்ளலாம்.

மின்–வாக்கு பதிவு பற்றி ஏதேனும் ஐயப்பாடு இருந்தால் உறுப்பினர்கள் கார்வியின் https://evoting.karvy.com இணையதளத்தில் "அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs)" என்கிற பகுதியை வாசிக்கவும். மின்–வாக்கு பதிவு பற்றிய தங்கள் விசாரணைகளை நிறுவன உறுப்பினர்கள் பின் வருவோருக்கு முகவரியிட்டு அனுப்பிவைக்கலாம். அதாவது – நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற முகவர் Ms. ரஜிதா சொல்லேட்டி, சீனியர் மேனேஜர் – ரெஜிஸ்ட்ரார் இன் செக்யூரிட்டீஸ், கார்வி கம்ப்யூட்டர்ஷேர் பிரைவேட் லிமிடெட், கார்வி செலினியம் டவர் B, பிளாட் எண் 31 & 32, கச்சிபவுலி, ஃபினான்சியல் டிஸ்ட்ரிக்ட், நானக்ரம்குடா, செரிலிங்கம்பள்ளி, ஹைதராபாத் – 500032 அல்லது தொலைபேசி +91 40 67162222 அல்லது இ–மெயில் einward.ris@karvy.com அல்லது நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் உள்ள நிறுவன செயலர் Ms. ஜெயஸ்ரீ S அய்யர், 410A, 4வது மாடி, ஸ்பென்சர் பிளாசா, பேஸ் II, 769, மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை–600002 அல்லது தொலைபேசி 044–42995000 அல்லது இ–மெயில் secretarial@equitas.in

தபால் வாக்கு நடைமுறையின் முடிவுகள் புதன்கிழமை ஜூன் 29, 2016 அன்று மாலை 4.30 மணிக்கு அறிவிக்கப்படும். பின் அது பற்றி BSE லிமிடெட்டுக்கும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியாவுக்கும் தகவல் தெரிவிக்கப்படும். அந்த முடிவுகள் நிறுவனத்தின் www.equitas.in இணையதளத்தில் வெளியிடப்படும்.

போர்டின் ஆணைப்படி
எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டுக்காக
(ஒப்பம்)
Ms. ஜெயஸ்ரீ S அய்யர், நிறுவன செயலர்

இடம்: சென்னை
தேதி: மே 28, 2016

## ஹிமாலயா கிரானைட்ஸ் லிமிடெட்

**பதிவு அலுவலகம்: பாஞ்சாலம் கிராமம், மேல்பேட்டை அஞ்சல், திண்டிவனம், தமிழ்நாடு–604 307.**

CIN: L13206TN1987PLC015161 Telefax: 044–26693378. Email: investors@hgl.co.in Website: www.hgl.co.in

**31 மார்ச், 2016ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கையான நிதிநிலை முடிவுகள்**

(ரூ. லட்சத்தில்)

| விவரங்கள் | முடிந்த காலாண்டு 31.03.2016 (தணிக்கையானது) | முடிந்த காலாண்டு 31.03.2015 (தணிக்கையானது) | முடிந்த ஆண்டு 31.03.2016 (தணிக்கையானது) | முடிந்த ஆண்டு 31.03.2015 (தணிக்கையானது) |
|---|---|---|---|---|
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 0.79 | 2.00 | 0.79 | 2.00 |
| வரிக்கு பின் சாதாரண நடவடிக்கை மூலம் நிகர லாபம்/(நஷ்டம்) | 3.35 | 1.48 | 12.56 | (23.46) |
| வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (12.56) | 1.48 | (3.35) | (23.46) |
| சமபங்கு மூலதனம் | 231.68 | 300.50 | 231.68 | 300.50 |
| ரிசர்வுகள் (கடந்த ஆண்டு நிதிநிலைஅறிக்கைபடி மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) | 0.00 | 0.00 | 473.20 | 614.20 |
| பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) (ஒன்றின் மதிப்பு ரூ.10/–) அடிப்படை: | (0.54)★ | (0.05)★ | (0.12) | (0.78) |
| பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) (ஒன்றின் மதிப்பு ரூ.10/–) அடிப்படை: | (0.54)★ | (0.05)★ | (0.12) | (0.78) |

★ வருடாந்திரமல்ல

குறிப்புகள்:

1. மேற்கண்ட முடிவுகள் தணிக்கை குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு 28 மே, 2016 அன்று நடைபெற்ற கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டன.
2. எங்கெல்லாம் தேவையோ அங்கு கடந்த கால கணக்குகள் மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.
3. ஒரு வர்த்தக பகுதிக்கு மிகாமல் அல்லது ஒரு ஜியோகிராபிகல் பகுதிக்கு மிகாமல் இருப்பதால் ஏஎஸ் 17ன்படி பகுதி அறிக்கை பொருந்தாது.
4. இயக்குனர்கள் குழு மற்றும் பங்குதாரர்களின் ஒப்புதலின்படி, டெண்டர் ஆபர் ரூட் மூலமாக ஒரு பங்கு ரூ. 30/– என்ற விலையில் 6,88,216 பங்குகளை (மொத்த சமபங்குகளின் எண்ணிக்கையில் 22.90%) கம்பெனி திரும்ப வாங்கி உள்ளது. சமபங்குகள் திரும்பி வாங்கிய பின்னர், கம்பெனியின் வெளியீடு, சந்தா மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 30,50,000 சமபங்குகளிலிருந்து 2,316,784 சமபங்குகளாக குறைக்கப்பட்டது.
5. தனியான நிதிநிலை முடிவுகள் பொருத்தமட்டில், 31 மார்ச் 2016ல் முடிந்த காலாண்டுக்கான மற்றும் 31 மார்ச் 2015ல் முடிந்த இதே காலாண்டுக்கான கணக்குகள், முழு நிதி ஆண்டுக்கான தணிக்கையான கணக்குகள் மற்றும் 31 மார்ச்–ல் முடிந்த நிதி ஆண்டின் மூன்றாவது காலாண்டுக்கான வெளியிடப்பட்ட கணக்குகள் இடையே சமன் செய்யப்பட்டவையாகும்.

SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.hgl.co.in-ல் உள்ளது.

குழுவின் ஆணைப்படி
**ரமேஷ் குமார் ஹரித்வால்**
**நிர்வாக இயக்குனர் மற்றும் சிஇஓ**

**இடம் : புதுடெல்லி**
**தேதி : 28 மே, 2016**

### ஏல அறிவிப்பு

Madhuvanthi Vivek, 6, 1st Cross Street, Seethammal Extn, Teynampet, Chennai-600 018. என்ற விலாசத்தில் உள்ள தங்கம், மற்றும் வெள்ளியால் ஆன பொருட்கள் நாள் 30.5.16 அன்று மாலை 3.00 மணியளவில் **ஏலதாரர் பாஸ்பின்ரா ஆக்ஷனியர்ஸ்** அவர்களால் நெ.22/2, கார்ப்பரேஷன் காலனி, ஆற்காட் ரோடு, கோடம்பாக்கம், சென்னை–24. என்ற விலாசத்தில் பகிரங்கமாக ஏலம் போடப் படும்.

### ஏல அறிவிப்பு

ஸ்ரீ பத்மம் அடகு கடை, நெ.126, போளூர் ரோடு, செங்கம், திருவண்ணாமலை என்கிற அடகு வணிகரின் வசம் 01.04.2014 முதல் 31.03.2015 வரை அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத அடகுப் பொருட்களை 02.06.2016 அன்று காலை 10 மணியளவில் மேற்படி அடகு வணிகரின் கடையில் வட்டாட்சியர் முன்னிலையில் **R.கிருஷ்ணன்** அவர்களால் ஏலம் போடப்படும்.

★★★★★★

N.ரமேஷ் அடகு கடை, பான்புரோக்கர், நெ.23/6D, அசலியம்மன் கோயில் தெரு திருவண்ணாமலை என்கிற அடகு வணிகரின் வசம் 01.08.2014 முதல் 28.02.2015 வரை அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத அடகுப் பொருட்களை 06.06.2016 அன்று காலை 10 மணியளவில் மேற்படி அடகு வணிகரின் கடையில் வட்டாட்சியர் முன்னிலையில் **R.கிருஷ்ணன்** அவர்களால் ஏலம் போடப்படும்.

### II Addl. Judge IN THE CITY CIVIL COURT AT CHENNAI
**I.A. No. 15055 of 2015**
**in**
**O.S. No. 5074 of 2013**

Mr. E.Kuberan
...Petitioner/Plaintiff
-Vs-
E. Rani & others
...Respondents/ Defendants

To
R3 -E. Gajendran,
S/o. Late T.M. Ekambaram
Old No. 67, New No. 55,
Buji Naicken Street,
Anna Nagar East,
Chennai -600 102

The above named petitioner has filed the application in I.A No. 15055 of 2015 in O.S No. 5074 of 2013 against you and others to restore the above suit on file which was dismissed for default on 11.08.2015. The Hon'ble II Additional Judge, City Civil Court, Chennai was pleased to order issuance of Notice through paper publication to you returnable by 16-06-2016. Hence take notice and appear before the said Court on 16-06-2016 at 10:30 am either in person or through your authorized representative failing which the said matter will be decided in your absence.

**M. Aravindan**
Counsel for petitioner

## அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில், மதுரை - 625 301.

**டெண்டர்**

**இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**

ந.க.எண். 695/2016/ஆ6 நாள் : 26.05.2016

| வ.எண். | வேலையின் விபரம் | ஒப்பந்த படிவம் விலை | ஒப்பந்த முன் வைப்புத் தொகை | ஒப்பந்த காலம் | டெண்டர் திறக்கப் படும் நாள் / நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் மற்றும் இதன் உபகோயில்களில் தூய்மைப் பணியாளர்கள் 48 நபர்கள் மற்றும் மேற் பார்வையாளர்கள் 2 நபர்களைக் கொண்டு அவுட் சோர் சிங் முறையில் தூய்மைப்பணி மேற் கொள்வதற்கு பிராசாதம் மற்றும் நெய்தீபம் விற்பனை பணிக்கு 31 நபர்களும் ஆகக்கூடுதல் 81 நபர்களை கொண்டு அவுட்சோர்சிங் முறையில் பணி மேற்கொள்வதற்கு அரசு பதிவு பெற்ற, முன் அனுபவமுள்ள ISO தரச்சான்று பெற்ற, தகுதி வாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. | ரூ. 1,000/- + வரி | ரூ. 2,00,000/- | 01.07.2016 முதல் 30.06.2017 முடிய | 16.06.2016 11.00 மணி முதல் உறை (Technical bid) 17.06.2016 11.00 மணி இரண்டாம் உறை (Price bid) |

**பொது ஏலம் / டெண்டர் நிபந்தனைகள் :**

1) வருமான வரி நிரந்தர கணக்கு எண் Pan Card உள்ளவர்கள் மட்டும் டெண்டரில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
2) டெண்டர் டெபாசிட் தொகை **"துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி", அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில்** என்ற முகவரிக்கு வங்கி வரைவேலையாக செலுத்த வேண்டும்.
3) டெண்டர் படிவம் விற்பனை செய்யப்படும் நாள். 08.06.2016ம் தேதி முதல் 14.06.2016ம் தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, டெண்டர் வந்து சேர வேண்டிய நாள்.15.06.2016ம் தேதி மாலை 5.00 மணிக்குள்
4) இதர விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் திருக்கோயில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**வி.ஆர்.வெங்கடாஜலம்**
**தக்கார்.**

**க. செல்லத்துரை, எம்.ஏ., பி.எல்.,**
**துணை ஆணையர் / நிர்வாக அதிகாரி (கூ.பொ)**

செ.ம.தொ.இ./ 2006 /ஒப்பந்தப்புள்ளி/2016